Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 05 (18 - 05 - 1992) திங்கட்கிழமை ஓசை: 90

## ஆங்கில ஆசிரியர் பரீட்சை முடிவுகள் வெளியாயின

(கொழும்பு)

ஆங்கில ஆசிரியர்களுக்கான பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளியாகியுள்ளது 1991-ம் ஆண்டு ஆகஸ்ட் 31- ம் திகதியன்று நாடு முழுவதிலும் நடத்தப்பட்ட ஆங்கில ஆசிரியர் பரீட்சைக்கான முடிவுகள் கடந்த வார இறுதியில் வெளியான தாக கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். மேற்படி பரீட்சை நடை பெற்று சுமார் பத்து மாதங்களின் பின்னர் இம் முடிவுகள் வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இப் பரீட்சையில் அறுபது புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் நியமனம் பெறவுள்ளனர்.

# புலிகள் - அரசு பேச்சுவார்த்தைக்கு இந்திய அரசாங்கம் முட்டுக்கட்டை

## சிறிலங்கா மீது ராஜதந்திர அழுத்தம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளும், சிறிலங்கா அரசும் நேரடிப் பேச்சுவார்த்தை நடாத்து வதை இந்திய அரசு விரும்பவில்லை என்பது இப்பொழுது தெளிவாகியுள்ளது. விடுதலைப் புலிகளைச் சட்டவிரோத இயக்கமாகப் பிரகடனப்படுத்தி தடை விதித்துள்ள இந்திய அரசு, விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது என சிறிலங்கா அரசு மீது இராஜதந்திர அழுத்தங்களைப் பிரயோகித்து வருகிறது. விடுதலைப் புலிகளை அந்நியமாக்கி இந்தியாவிற்கு சார்பான ஏனைய தமிழ்க் குழுக்களுடன் பிரேமதாசா அரசு பேச்சுக்களை நடத்தி இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்றே இந்தியா விரும்புகிறது.

இந்தியாவின் நிலைப்பாட்டைச் சூட்சுமமாக வெளியிடும்முறையில் இந்தியத் தூதுவர் ஜா ஞாயிறு வார இதழான சண்டே ரைம்ஸிற்குப் பேட்டி ஒன்றை அளித்துள்ளார். இந்தப் பேட்டியில், புலிகள் மீது இந்தியா விதித்துள்ள தடையை சிறிலங்கா அரசு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தவேண்டும் எனக் கேட்டுள்ளார்.

தமிழர் பிரச்சினையில் இந்தியா பராமுகமாக இருக்க முடியாது. இது ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய யதார்த்தம். விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடாத்தமுன் யதார்த்தநிலைகளைக் கருத்தில்கொண்டு சிறிலங்கா அரசு சிந்திக்கவேண்டும். தற்போது விடுதலைப் புலிகள் மீது இந்தியா விதித்துள்ள தடை இனப்பிரச்சினைக்கு உண்மையான தீர்வுகாண சிறிலங்காவை ஊக்குவிப்பதாக இருக்கவேண்டும் என்றார்.

இந்தியா விதித்துள்ள தடையால் உருவாகியுள்ள சிக்கலான அரசியல் யதார்த்தங்களை சிறிலங்கா அரசு உணர்ந்திடவேண்டும் என மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் அமைதியை உருவாக்குவதில் இந்தியா ஆற்றக்கூடிய பங்கு பற்றிய கேள்வியொன்றுக்கு பதிலளித்த அவர், சம்பந்தமில்லாத தரப்பினர் என்பதுபோல இதுபற்றி கவலை கொள்ளாமல் இந்தியா இருக்க முடியாது என்றும் இந்த விடயத்தில் இந்தியாவிற்கு மிக முக்கிய பணியுண்டு என்றும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் மீதான தடையுத்தரவு எப்போதாவது மீளப்பெறப்படுமா என்று கேட்கப்பட்டபோது, எந்தவொரு அரசும் தாம் தடைவிதித்த இயக்கத்தின் மீதான

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தெரிவுக்குழு நாளை கூடுகிறது

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைக்காணும் முகமாக அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் அடுத்த அமர்வு நாளை இடம் பெறவுள்ளது

இந்த அமர்வு இடம்பெறும் போது ஒருமித்த தீர்மானம் ஒன்றை முன் மொழிவதற்காக ஏழு தமிழ்க் குழுக்களும் முஸ்லிம் காங்கிரசும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளன.

பாதுகாப்பு வரி அதிகரிப்பு

## மக்கள் சிரமங்களை அறிய எதிர்க்கட்சிகள் தவறிவிட்டன

[கொழும்பு]

சிறிலங்காவில் பாதுகாப்பு வரி மும்மடங்காக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இதனால் ஏற்கனவே அதிகரித்த நிலையில் இருக்கும் வாழ்க்கைச் செலவு மேலும் அதிகரித்துள்ளது. இந்த நிலையிலும் சிறிலங்காவில் உள்ள எதிர்க்கட்சிகளும் தொழிற்சங்கங்களும் மௌனம் சாதித்து வருகின்றன. இவ்வாறு ''லக்தீப'' சிங்கள நாளிதழின் ஆசிரியர் மெனிக்அத்திகொட பி.பி.ஸி. யின் சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு வரியை அரசாங்கம் மும்மடங்காக அதிகரித்திருப்பதால் மாதாந்தம் சுமார் 240 கோடி ரூபாவை வருமானமாக அரசு எதிர்பார்க்கிறது. சாதாரண மக்களின் நுகர்வுப் பொருட்கள் மீதும் உற்பத்திப் பொருட்கள் மீதும் இவ்வாறு வரி அதிகரித்திருப்பதால் இம் மக்களது நாளாந்த வாழ்க்கைச் செலவு அதிகரித்துச் செல்ல உள்ளது.

இதனால் சாதாரண மக்கள் சிரமங்களை எதிர்நோக்க இருக்கின்றனர்.

இவ்வாறான நிலைமைகளை தெளிவாக விளங்கிக் கொண்டும்கூட தொழிற் சங்கங்களும் எதிர்க்கட்சிகளும் அரசின் மேற்படி நடவடிக்கை குறித்து மௌனம் சாதித்து வருவது வியப்பை ஏற்படுத்துவதாக அவர் தமது பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

## அரசு, எதிர்க்கட்சிகள் மீது மக்கள் நம்பிக்கை இழப்பு

### சிங்கள பி. பி. ஸி கணிப்பு

(கொழும்பு)

தற்போதைய அரசு மீதும், எதிர்க்கட்சிகள் மீதும் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர். இதனால் இவற்றுக்கெதிராகக் குரல் கொடுக்கத் தொடங்கியதுடன், சுதந்திரமான பொதுத் தேர்தல் ஒன்றை நடாத்தும்படியும் கோரிக்கைவிடுத்துள்ளனர். இவ்வாறு பி. பி. ஸியின் சிங்கள சேவை தனது இலங்கைக்கண்ணோட்டத்தில் தெரிவித்தது.

தேர்தல் முறைகேடு பற்றித் தேர்தல் ஆணையாளர் அண்மையில் வெளியிட்ட அறிக்கையும், முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு. உடுகம்பொல வெளியிட்ட தகவல்களுமே அரசுமீதும், எதிர்க்கட்சி மீதும் மக்கள் நம்பிக்கை இழக்கக்காரணம் என்று கூறப்படுகிறது.

அரசு கலைக்கப்படவேண்டும் அல்லது எதிர்க்கட்சிகள்

## எதிர்க்கட்சி எம். பிக்கள் வெளிநாடு பயணம்

[கொழும்பு]

...முனன்று வாசுதேவ நாணயக்கார...

## அகதி முகாமிலுள்ள தமிழர் அவதி முகாம்களை மூட அரசு முயற்சி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் அகதிமுகாம்களைக் குறைக்கும் நடவடிக்கைகளில் சிறிலங்கா அரசு ஈடுபட்டுள்ளது. பல அகதி முகாம்களில் உள்ள தமிழர்களை அவர்களது சொந்த இடங்களுக்குச் செல்லுமாறு இராணு...

பல அகதி முகாம்கள் வேண்டுமென்றே சிங்கள, முஸ்லிம் குடியிருப்புகளுக்கு அண்மையான இடங்களிற்கும், இராணுவ முகாம்களுக்கு அருகாமையிலும் கொண்டு செல்லப்படுகின்றன.

பெருமளவு அகதி முகாம்களை...

மட்டக்களப்பு நகரிலும் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட இரு இடங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவத்தின் மீது தாக்குதல் போராளி ஒருவர் வீரச்சாவு

## வெளிநாட்டு பயணம்

[கொழும்பு]

மே மாதம் 13, 14ஆந்திகதிகளில் அநேக எதிர்க்கட்சி எம்பிக்களும் திருமதிகாமினிதிஸாநாயக்காவும் வெளிநாடு சென்றனர்.

திருமதி காமினி திஸாநாயக்கா புதன்கிழமையன்றுலண்டனுக்குப்பயணமானார் வியாழனன்று வாசுதேவ நாணயக்கார அம்ஸ்டர்டாமுக்குப் பயணமானார்.

சிறி லங்கா சுதந்திரக்கட்சி எம். பிக்களான சுதாதிஸ்ஸ சாகரசூரிய நேயல் பத்மசிலி, பேர்டி திஸநாயக்காஆகியோர் புதனன்று ஜப்பானுக்குச்சென்றனர்.

...படுகிறது.

அரசு கலைக்கப்படவேண்டும் அல்லது எதிர்க்கட்சிகள் தமது பதவியை இராஜினாமா செய்து பொதுத்தேர்தல் ஒன்றை நடாத்துவதற்கான சூழலை உருவாக்கவேண்டும் என்று சாதாரண பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

...களில் உள்ள தமிழர்களை அவர்களது சொந்த இடங்களுக்குச் செல்லுமாறு இராணுவத்தினர் விரட்டியுள்ளனர்.

...படுகின்றன.

பெருமளவு அகதி முகாம்களை வாழைச்சேனையிலும்...

## இராணுவத்தினர் மீது தாக்குதல் போராளி ஒருவர் வீரச்சாவு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு தம்பசிட்டி முகாமிலிருந்து வெளியேறி வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

இத்தாக்குதல் பற்றிமேலும் தெரியவருவதாவது: நேற்று முன்தினம் காலை 7.45 மணியளவில் மேற்படி இராணுவ முகாமிலிருந்துதுப்புரவு செய்து கொண்டு வெளிவந்த இராணுவத்தினரை தாக்கவென விடுதலைப் புலிகள் ஆயத்த நிலையில் இருந்தனர்.

இத்தாக்குதல் பற்றிஅறிந்து கொண்ட இராணுவத்தினர் அவ் விடத்திற்கு வந்த போது புலிகள் அவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டனர்.

15நிமிடம் இடம்பெற்ற இத்தாக்குதலில் இராணுவத்தின் தரப்பிலான சேதவிபரம் தெரி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மட்டக்களப்பில் பொலிசாரால் கைதான மாணவர்களின் நிலைபற்றி தெரியவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் மாணவர்கள் நடாத்திய ஆர்ப்பாட்டப்பேரணியின் போது கைது செய்யப்பட்ட பல மாணவர்களின் நிலை பற்றி இதுவரை எதுவும் தெரியவில்லை.

பொலிசாரால் கைது செய்யப்பட்ட இரு மாணவிகளை விடுதலை செய்யும்படி கோரி களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையம் முன்பாக கடந்த புதன்கிழமை ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்களில் 100க்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டமை தெரிந்ததே.

கைது செய்யப்பட்டவர்களில்பலர் இரு நாட்கள் கழித்து

[4 ஆம் பக்கம் பார்க்க]

# யுத்தக் கைதிகள் பரிமாற்றம் அரசு முற்றாக மறுப்பு

## - புத்தபிக்கு வேதனை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் யுத்தக் கைதிகளைப் பரிமாறிக் கொள்வது தொடர்பாக அரசு தொடர்ந்தும் மௌனம் சாதித்து வருகிறது. இத்தகைய நிலைமை மிகவும் வேதனைக்குரியது என்று யாழ்ப்பாணம் சென்று திரும்பிய பௌத்த பிக்குகளில் ஒருவரான வண. பண்டிற் மாதம்பகம அஸாஜி தேரர் கூறியுள்ளார் பி பி. ஸி. யின் கொழும்புச் செய்தியாளருக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

யுத்தக் கைதிகளைப் பரிமாறிக் கொள்வதற்கு விதலைப் புலிகள் முன்வந்த போதிலும் அரசு இவ் விடயத்தில் தொடர்ந்தும் மௌனம் சாதித்து வருகிறது.

தமக்கு கிடைத்த உத்தியோகப்பற்றற்ற தகவல்களின்படி அரச உயர் அதிகாரிகள் இக் கைதிகள் பரிமாற்றத்துக்கு முற்றாக மறுத்து விட்டதாகவும் அரசின் இத்தகைய போக்கு மிகவும் வேதனைக்குரியது என்றும் அவர் தமது பேட்டியில் குறிப்பிட்டிருக்கிறார்.

## பொருள்கள் எடுக்க சென்ற பொதுமக்கள் மீது சூடு

(மன்னார்)

பூநகரியில்சிறிலங்காஇராணுவத்தினர் பொதுமக்கள் மீது துப்பாக்கி பிரயோகத்தையும் எறிகணைத்தாக்குதலையும் மேற் கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் பூநகரி வாடியடியிலுள்ள இராமலிங்கம் வீதிக்கு பொருள்களை எடுக்கச் சென்ற பொதுமக்கள் மீது

[4 ஆம் பக்கம் பார்க்க]

# திருமலையில் நில உறுதிகள் பறிப்பு; நிலத்தை அபகரிக்க அரசு சூழ்ச்சி

[திருக்கோணமலை]

திருக்கோணமலையில் தமிழரின் நிலஉறுதிகள் சிறிலங்கா அரச அதிகாரிகளால் பறிக்கப்பட்டு வருகின்றன. சிங்களவர் குடியேற்றப் பட்ட பின் தமிழர்கள் அந் நிலங்களுக்கு உரிமையாளர்கள் என்பதற்கான ஆதாரங்களை அழிக்கவே இவ்வாறு நில உறுதிகள் பறிக்கப்படுகின்றன.

இந்நடவடிக்கை சிறிலங்கா அரச அதிகாரிகளால் முனைப்போடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருக்கோணமலையின் அரச செயலக அதிகாரிகளே இச் செயலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களது இந் நடவடிக்கைகளுக்கு இராணுவத்தினரும் ஊர்காவற் படையினரும் உதவியாக இருந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர்கள் போராட்டம் முற்றிலும் நியாயமானது

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களது தற்போதைய போராட்டம் நியாயமானதே என்று இப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் திரு. ஐ. வி. ரவி சிங்க கூறியுள்ளார்.

கற்கைநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்கள் வெளியேறமுன்னர் இரு கல்வி ஆண்டுக்குரியமாணவர்களுக்கு ஒரே நேரத்தில் கற்கை நெறியை ஆரம்பித்தமையாலும், கடந்த ஆண்டுகளைவிட மேலதிகமாக இவ்வாண்டு முப்பது சதவீதமான மாணவர்களைப் பல்கலைக்கழகத்துக்கு அனுமதித்தமையாலும் பல்கலைக்கழக விடுதிகளில் இட நெருக்கடி ஏற்பட்டிருப்பது உண்மையே என்றும், அத்துடன் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த சாதாரணமக்கள் தற்பொழுது கொழும்பில் தங்கியிருப்பதால் இம்மாணவர்கள் இடவசதியைப் பெற்றுக்கொள்வது மிகவும் சிரமமாக உள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதற்கு அரசாங்கம் உடனடியாக உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

# இனவிகிதாசாரத்தை மாற்ற திட்டமிட்ட படுகொலைகள்

## லோறன்ஸ் திலகர்

(கொழும்பு)

"கிழக்கு மாகாணத்தில் இருந்து தமிழ் முஸ்லிம் மக்களை வெளியேற்றி விட்டு புதிய சிங்கள குடியேற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம்கிழக்கு மாகாணத்தில் சிங்கள இன விகிதாசாரத்தை அதிகரிப்பதற்காகவே அங்கு திட்டமிடப்பட்ட படுகொலைகளை அரசு செய்து வருகிறது. இதன் ஓர் அங்கமே அண்மையில்கிழக்கில் நடாத்தப்பட்ட படுகொலை ஆகும்" இவ்வாறு லோறன்ஸ் திலகர் பி.பி ஸி. யின் சிங்கள சேவைக்கு வழங்கிய விசேட பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடந்த கிழக்கு மாகாணப் படுகொலைக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று கூறிய அவர் கிழக்கில் சமூகங்களுக்கிடையில் சகோதரத்துவத்தை விரும்பாத சக்திகளும், அரசின் கைக்கூலிகளுமே இவ்வாறான கொலைகளுக்குக் காரணம் என்றும் கூறினார். எனினும் இக்கொலைகளின் சூத்திரதாரிகள் இதுவரை திட்டவட்டமாக கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் கூறினார்.

தென்பகுதியில் சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இவ்வாறு கொன்று குவிக்கப் பட்டிருக்கின்றனர். இவர்களைக் கொன்றதும்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கட்டையர் குளத்தில் விமானக் குண்டு வீச்சு

(வவுனியா)

வவுனியா மாவட்டம் கட்டையர் குளம் பகுதியில் சிறிலங்கா விமானங்கள் இரு தடவைகள் மேற்கொண்ட குண்டு வீச்சிற்கு ஒரு வீடு முற்றாக இடிந்து வீழ்ந்தது

நேற்று காலை ஆறு மணியளவில் இப் பகுதியிலுள்ள குடியிருப்புகள் மீது மூன்று பொம்மர்கள் ஆறு குண்டுகளை வீசியன இக் குண்டு வீச்சிற்கு கைவிடப்பட்ட ஒரு வீடு முற்றாக இடிந்து வீழ்ந்தது. மேலதிக சேதவிபரம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டை பகுதியைநோக்கி இடைவிடாத எறிகணை வீச்சு

மண்டைதீவுப் பகுதியில் நிலை கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று நண்பகல் யாழ்நகரின் கோட்டை, கொட்டடி ஆகிய பகுதிகளை நோக்கி நீண்ட நாட்களின் பின்னர் ஷெல் தாக்குதலையும் பரவலான 50 கலிபர்த் தாக்குதல்களையும் மாலை வரை மேற்கொண்டவாறு இருந்தனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

காங்கேசன் துறைமுகக் களஞ்சிய

# உலர்உணவு பொருள்களை பாதுகாக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் களஞ்சியத்தில் உள்ள உணவுப் பொருள்களை பழுதடையாமல் பாதுகாப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி களஞ்சியத்தில் இருந்து பழுதடைந்த உணவுப் பொருள்கள் எடுத்து வரப்படுவதைத் தவிர்க்கும் முகமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது இதற்காகக்களஞ்சியப் பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்கான விசேட இரசாயன முறைக் கட்டுப்பாடு அறிமுகப்படுத்தப்படவிருக்கிறது. பீடை எதிர்ப்பு வாயுச்சிலிண்டர்கள் கொழும்பிலிருந்து எடுத்து வரப்படவிருக்கிறது. இவ்வாயுவைப் பயன்படுத்தி உணவுப் பொருள்களை பீடைகள் தாக்காத வண்ணம் பாதுகாக்க முடியும் என்று கூறப்படுகிறது. ஆனால் ஏற்கனவே பழுதடைந்த உணவுப் பொருள்களை இம்முறையைப் பயன்படுத்தி சுத்திகரிக்க முடியாது என்றும் கூறப்படுகிறது [அ]

# 'பெங்குயின்' வெளியீட்டில் ஈழத்து ஆக்கங்கள்

உலகப்பிரசித்திபெற்ற லண்டன் பெங்குயின் நூல் பதிப்பகம் ஈழத்து எழுத்தாளர்களது கதைகள், கவிதைகள் அடங்கிய தொகுப்பொன்றை வெளியிட்டுள்ளது.

'இலங்கையின் புதிய ஆக்கங்கள்'' என்றபெயரில் வெளியாகியுள்ள இந்த நூல் 245 பக்கங்களைக்கொண்டது. சு. சட்டநாதன்எழுதிய 'விமலா'; நந்தி எழுதிய 'படிகம்', எஸ். எம். இராமையா எழுதிய 'மலைகளுக்கு மத்தியில்', பி தம்பிராஜா எழுதிய 'தலைக் கொள்ளி' ஆகிய கதைகள் இதில் இடம்பெற்றுள்ளன.

இக்கதைகள் தமிழ் மூலத்தில் இருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டவையாகும். இந்நூலில் சிங்கள எழுத்தாளர்களின் ஆக்கங்களும் இடம்பெறுகின்றன.

மேலும் மகாகவி முருகையர் சில்லையூர் செல்வராஜன், குறிஞ்சிநாதன் எம். ஏ நுஃமான் ஆகியவர்களின் கவிதைகளும் இடம் பெறுகின்றன.

இந் நூலைக் களனிப் பல்கலைக்கழக ஆங்கிலத்துறைத் தலைவர் பேராசிரியர் டி. சி. ஆர். ஏ. குணதிலக்கா தொகுத்துள்ளார்.

# மாணவர் பற்றி அறிய பெற்றோர் ஆவல்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் யாழ்ப்பாண பகுதி மாணவர்களினது நிலையை அறிய மாணவர்களது பெற்றோர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கும், செயலகத்திற்கும் வந்து செல்கின்றனர்.

கொழும்பு பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் சிலர் யாழ்ப்பாணம் வருவதற்கான முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர் எனவும் தெரியவருகிறது.

இதேவேளை இன்று 18-ம் திகதி மீண்டும் சுமுகமான நிலை ஏற்பட்டால் திறக்கப்படும் என துணைவேந்தர் பீரிஸ் அறிவித்துள்ளமையும் தெரிந்ததே. (05)


## இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணக் கிளைத் தலைமையகம்

1. சுகாதாரப் போதனாசிரியர்
2. தாதியர் போதனாசிரியர்

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கல்வித்தகைமைகள், அனுபவம், ஆற்றல், சேவை செய்யும் மனப்பான்மை உள்ளோரிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் 26-05-92 க்கு முன் எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும். 28-05-92 காலை 10-00 மணிக்கு நேர்முகப்பரீட்சை நடைபெறும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

73, கண்டிவீதி,

ச. சிவானந்தராசா


# வஞ்சம்தீர்க்கும்நடவடிக்கையே ராஜீவ் காந்தி கொலையாம்

## சி.பி.ஐ. விசாரணையின் முடிவு

(சென்னை)

இந்திய அமைதி காக்கும் படை இலங்கையில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளுக்கு பழிதீர்க்கும் கைங்கரியமாகவே முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை விடுதலைப்புலிகள் கொலை செய்தனர் என்ற முடிவுக்கு இக் கொலை தொடர்பாக விசாரணை நடாத்தி வரும் இந்திய புலனாய்வு பணியகத்தின் (சி. பி ஐ விசேட விசாரணைக்குழு வந்திருக்கிறது என விசேட விசாரணைக்குழு வெளியிட்டுள்ள குற்றப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

பயங்கரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் சட்டத்தின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்த விதந்துரைக்கப்பட்ட ஒரு வருடகாலம் எதிர்வரும் ஜூன் 10 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

சி பி. ஐ. இயக்குநர் விஜய் கரனின் அங்கீகாரத்துக்காக காத்திருக்கும் குற்றப் பத்திரிகையிலே விசேட விசாரணைக்குழு ''ராஜீவ் கொலைக்கான முழு நடவடிக்கைகளும் புலிகளினாலேயே திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. வெளிநாட்டு சக்தியொன்றினால் புலிகளுக்கு லஞ்சம் கொடுக்கப்பட்டுள்ளது என்ற கேள்விக்கு இடமில்லை'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது

தனது இடையில் குண்டைக் கட்டிக் கொண்டு வந்து ராஜீவ்காந்தியைக் கொலை செய்த 'தனு' என்ற பெண் இந்திய அமைதிகாக்கும் படையினரால் கற்பழிக்கப்பட்டிருக்கிறார் என்பதையும் விசேட விசாரணைக்குழு வெளிப்படுத்தியிருக்கிறது. இதுதான் கொலைக்கான 'மனிதக் குண்டாக' புலிகளின் தலைவர்களினால் தனு தெரிவு செய்யப்பட்டதற்குக் காரணம் எனக் குற்றப்பத்திரிகை கூறுகிறது

யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் உள்ள பிரபாகரனின் மறைவிடமொன்றில் நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் இக்கொலைக்கான சதித் திட்டம் தீட்டப்பட்டதாகவும் பிரதான சதியாளர்கள் இக் கூட்டத்தில் பிரசன்னமாகியிருந்தனர் என்றும் அக்குற்றப்பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு தமிழர்களுக்காக

# தொண்டமான் குரல் கொடுப்பதில் தவறு எதுவும் இல்லை

## - இரா. தங்கவேல்

(மாத்தளை)

வடக்கு கிழக்கு பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் கொடுமைப்படுத்தப்படும் போதும் நசுக்கப்படும் போதும் அவர்களுக்காக அமைச்சர் தொண்டமான் குரல் கொடுத்தால் அதில் தவறொன்றும் இருக்க முடியாது.

இவ்வாறு இ தொ.கா தொழிலுறவு அதிகாரி இரா தங்கவேல் அண்மையில் லெட்சுமிதோட்டத்தில்நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் 1988,89-ம் ஆண்டுகளில் ஜே.வி.பியின் கோரப்பிடியில் சீரழிந்து கொண்டிருந்த போது அப்பிரச்சினைக்கு முடிவுகாண அமைச்சர் தொண்டமான் ஆலோசனை வழங்கிய போது அதனை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு எதிர்ப்புத் தெரிவிக்காமல் மௌனமாக இருந்தனர் பேரினவாத அரசியல்வாதிகள்

ஆனால் இன்று அதே தொண்டமான் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண ஆலோசனை வழங்கும் போதுமட்டும் அதனை இனவாதக் கண்ணோட்டத்துடன் நோக்குவதேன்? எனக்கேள்வி எழுப்பினார்

பேரினவாத அரசியல் வாதிகள் காலத்துக்கு காலம் நாட்டில் இரத்த ஆறை ஓடவிட்டு அதில் அரசியல் நடாத்தி வருகின்றனர் தர்மத்தை போதிக்க வேண்டிய சில மதகுருமாரும் அவர்களுக்கு துணையாக இருப்பது வருந்தத்தக்க செயல் ஆகும் எனவே இன்றைய சூழ்நிலைக்கு ஏற்ப புத்திசலித்தனமாகவும் நிதானமாகவும் நடந்து கொள்ள வேண்டும்,

# புத்தபிக்கு மீது வருமான வரி வழக்கு

[கொழும்பு]

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வண. பொல்பொல விபாசி தேரோவுக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்துள்ளது. விபாசி தேரோ 1,630,000 ரூபா வருமான வரி கட்டத்தவறியதினலேயே அவர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் விபாசி தேரோ முறையே மூன்று பகுதிகளாக 784,940 ரூபா, 767,062 ரூபா மற்றும் 78,495 ரூபா வருமான வரித் திணைக்களத்துக்குச் செலுத்த வேண்டியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

விபாசி தேரோவுக்கு எதிரான வழக்கு கொழும்பு மாவட்ட மேலதிக நீதிபதி உபாலி அபயரட்னாவின் முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது தேரோ நாட்டில் இல்லை எனத் தெரியப்படுத்தப்பட்டது.

நிலுவையாக உள்ள வருமானவரியை வசூலிப்பதற்கு தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு நீதிமன்றம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தைப் பணித்தது.

## குருபூசை

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசை விழாவையொட்டி நாளை 19ம் திகதி செவ்வாய்க்கிழமை அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினரால் நல்லூர் ஸ்ரீ சட்டநாதசுவாமி ஆலயத்தில் காலை 6.30 மணிக்கு விசேட பூசையுடன் திருமுறைப் பெருவிழாவும், மன்றத்தலைவர் க. சொக்கலிங்கம் அவர்கள் தலைமையில் திருமுறைச் சுவடி ஊர்வலமும் நடைபெற உள்ளன.

# சோவியத் சென்ற மாணவர் தாயகம் வர உதவுக

## - சு. கட்சி. எம். பி. கோரிக்கை

(மாத்தளை)

புலமைப் பரிசில் பெற்று சோவியத் நாட்டுக்குச் சென்று உயர்கல்வி பயின்ற பின்னர் தாயகம் திரும்பி வரமுடியாமல் இருக்கும் இலங்கையரை உடன் இங்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்குமாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சி மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நந்தி மித்திரா வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஹரோல்ட் ஹேரத்தை கடித மூலம் கேட்டுக் கொண்டுள்ளார்.

அக்கடிதத்தில்மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

பல இலங்கையர்கள் பல்வேறு துறைகளிலும் அங்கு கல்வி கற்று வருகின்றனர். கல்வியை முடித்த பலர் அந்நாட்டு பொருளாதார பிரச்சினை காரணமாக இலவச விமான டிக்கெட் பெற்று இலங்கை திரும்பமுடியாமலுள்ளனர். இவர்களுக்குவழங்கப்பட்டு வந்த சலுகைகள் யாவும் கல்வி பூர்த்திஆனபின் நிறுத்தப்பட்டுள்ளதாகதெரிய வருகிறது

உணவு பெறக் கூட வசதி இன்றியும் சுமார் ஒரு லட்சம் ரூபா செலவு செய்து விமான டிக்கெட் பெறவேண்டியநிலையும் உள்ளது.

இது விடயத்தில் உடன் நடவடிக்கை எடுக்குமாறும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# முழு மனதுடன் அதிகாரிகள் சேவையாற்ற வேண்டும்

## வவுனியா அரச அதிபர்

(வவுனியா)

மீளக் குடியமரும் அகதிகளுக்கு அரச அதிகாரிகள் முழு மனதுடன் உதவ முன்வர வேண்டுமென வவுனியா அரச அதிபர் தில்லை நடராசா கோரிக்கை விடுத்துள்ளார். அவர் மேலும் கூறுகையில் மீளக் குடியமரும் அகதிகளுக்கும் எல்லா வசதிகளையும் செய்ய வேண்டிய சமூகப் பொறுப்பு அரசாங்க அதிகாரிகளுக்கு உண்டு வெறுமனே சம்பிரதாயத்திற்காக கடமையைச் செய்யாமல் இதய சுத்தியோடு ஈடுபடுங்கள் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். அரச அதிகாரிகளுக்கு நேர்மையும், சேவையுணர்வும் இருக்க வேண்டுமெனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# ஊவாவில் இளைஞர் கைது மீண்டும் ஆரம்பம்

[பதுளை]

ஊவா மாகாணத்தில் இளைஞர்கள் கைது செய்யப்படுவது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இரு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு ஒருவர் விடுதலை செய்யப்பட்டதாகவும் ஆனால் இவர் மேலதிக விசாரணைக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டதாகவும் தொழிற் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஊவா பகுதியில் பல தமிழ் இளைஞர்கள் பற்றி பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் இதனடிப்படையிலேயே கைது செய்யப்படுவதாகவும் கூறப்படுகிறது.

கடந்த பல மாதங்களுக்கு முன் அமைதி இழந்து இப்போது வழமை நிலைமைக்கு திரும்பி இருந்த ஊவா பகுதி மீண்டும் பதற்றமான நிலைமைக்குச் செல்வதாகவும் அமைதியை குழப்பி விட சில சக்திகள் மீண்டும் முனைவதாகவும் எனவே தான் பொய்த் தகவல்களை வழங்குவதில் இத்தீய சக்திகள் ஆர்வம் காட்டி வருகின்றன. இவர்களின் இவ் விசமத்தனத்தால் மலையக இளைஞர்கள் பலர் மீண்டும் கைது செய்யப்பட்டு வருகின்றனர் என தொழிற் சங்க அதிகாரிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

## கண்டெடுக்கப்பட்டது

பருத்தித்துறை வீதி, கல்வியன் காட்டைச் சேர்ந்த கதிரவேல் திபாகரராசா என்பவரது அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

73, கண்டிவீதி,
யாழ்ப்பாணம்.
15-05-92

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்
(சி/4428)

# 31 ஆவது நாள்
# நினைவஞ்சலி



தோற்றம் :
22 - 9 - 1-53

மறைவு ;
18 - 04 - 1992

அமரர்
## Dr.பரமேஸ்வரன் சிறீதரன்(M.B.B.S)

அன்பின் உருவமாய், பண்பின் சிகரமாய், குடும்ப விளக்காக ஒளிதந்து இடரகற்றிச் சிரித்து வாழப் பழக்கி யெம்மை அழவைத்துக் காளத்திவப்பன் காலடி பற்றி நின்ற எம்குல தெய்வமே உம்பாதம் தொழுது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

நாவலடி,
கோப்பாய்,
18 - 05 - 92.

அன்பு மனைவி, மக்கள்,
குடும்பத்தவர்

(2578)

78,495 ரூபா வருமான வரித் க்களத்தைப் பணித்தது.

# கொழும்பு வந்த சிறுவர்கள் பொலிசாரால் கைது

(கொழும்பு)
கொழும்பை பார்க்க வேண்டும் என்றஆர்வத்தில் நாவலப்பிட்டியில்இருந்துதிருட்டுத்தனமாக கொழும்பு வந்த இரு சிறுவர்கள் கோட்டையில் வழிதடுமாறிய நிலையில் கோட்டைப் பொலிசாரினால் பிடிக்கப்பட்டு சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

நாவலப்பிட்டி கிறீன் வூட் தோட்டத்தைச் சேர்ந்த வேலு திருக்கேதீஸ்வரன் (14வயது) கருப்பையா. சுதாகரன் (13 வயது) ஆகிய இருவருமேமேற்படி சிறுவர்களாவர்.

## கூட்டம்

யாழ். பல்கலைக் கழகத்தின் அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த மாணவர் ஒன்றிய உறுப்பினர்களுக்கான கூட்டமொன்று நாளை மாலை நான்கு மணியளவில் மாணவர் ஒன்றிய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. மாணவர் ஒன்றிய உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தரும்படி ஒன்றிய தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.


எந்த வகை பத்திரிகைத் தாளிலும் மட்டை (BOARD) களிலும்

மனம் நிறைந்த
தரம் குன்றாத

அச்சு வேலைகளுக்கு

தமிழ், ஆங்கிலம்
ஆகிய மொழிகளில்
துண்டுப் பிரசுரங்கள்
தொடக்கம்
பாரிய புத்தகங்கள்
வரை
பொறுப்பேற்கப்படும்

ஈழநாதம்
(அச்சக வர்த்தகப் பகுதி)
மகேந்திரா வீதி
யாழ்ப்பாணம்


# நினைவு கூருகின்றோம்---
## 1992-05-18

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் வல்வெட்டித்துறையில் முற்றுகையினை மேற்கொண்ட சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்படுகையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**செல்வம்** (அன்னலிங்கம் பகீன் - 5-ம் வட்டாரம் மண்டை தீவு)

1986ஆம் ஆண்டு இயக்கச்சியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**ரஞ்சித்** (ஜெயராஜ் சூசை - வங்காலை, மன்னார்)
**லெப் அங்கிள்** (பிரபுதாஸ் பாக்கியநாதன்-வில்லியம் ரஞ்சித்-கெற்பெலி மேற்கு, மிருசுவில்)
**ரகு** (வசீகரன் - சாவகச்சேரி)
**ஜோதிரவி** (அருமைத்துரை திருமானந்தம்-ஜோதிரவி வீதி, சந்திரபுரம், மட்டுவில் வடக்கு)

வசாவிளானில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**தேசிகன்** (சிவசாமி சிவகுமாரன் - புங்குடுதீவு)

1988ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**லெப் அருள்** (சபாரத்தினம் சத்தியராஜ் - மூதூர், திருக்கோணமலை)

திருக்கோணமலை, குச்சவெளிப்பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -
நிலாவெளிப் பிரதேசப் பொறுப்பாளர்

**கப்டன் கிங்ஸ்லி** (வல்லிபுரம் சிவகுமார் - கலட்டி, கரவெட்டி மேற்கு)

1989ஆம் ஆண்டு புத்தூரில் இந்திய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட 5 இளைஞர்கள் உட்பட 7 தமிழர்கள்

1991ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில் சிறிலங்காப் படையினரின் எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**சாள்ஸ்** (பொன்னுச்சாமி கருணாகரன்-'கமல வாசம்' இன்பருட்டி, பருத்தித்துறை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4427)

## சிந்தனைக்கு

இங்கிதமாக ஒருமுறை இடித்துக் கூறுவது ஆயிரம் அவமதிப்புகளுக்கு சமம்

— லூமி றைவர்


# ஈழநாதம்

61, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 18-05-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 25


## புதிய மொந்தையில்...

" வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் தேவை. வடக்கு கிழக்கில் இராணுவ முகாம்களைத் தொடர்ந்து வைத்திருப்பதால் எந்த வித பயனும் ஏற்படப்போவதில்லை ". இவ்வாறு ஜனதா விமுக்தி பெரமுனையின் ஜே.வி.பி. தற்போதைய தலைவர் சோமவன்ச அமரசிங்கா பி.பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே சரியான வழி எனக் குறிப்பிடும் முதல் நபராக சோமவன்ச அமரசிங்கா இல்லாவிடினும், வடக்கு கிழக்கில்இராணுவம்எதையும் சாதிக்கவில்லை, வடக்கு கிழக்கில் இருந்து இராணுவம் வெளியேற வேண்டும் எனத் தெரிவித்திருக்கும் முதல் சிங்களத் தலைவர் சோமவன்ச அமரசிங்கா ஆகும். ஆகையால், அரசியலில் சோமவன்ச அமரசிங்காவின் பலம் எவ்வாறு இருப்பினும் இராணுவம் வெளியேறவேண்டும் என்ற கோரிக்கை முதன்மையானதே.

சோமவன்ச அமரசிங்கா குறிப்பிட்டது போன்று வடக்கு - கிழக்கில் இராணுவ முகாம்களை வைத்திருப்பதில் பயன் ஏதும் ஏற்படவில்லை. மாறாக நெருக்கடிகளும், விடுதலைப் போராட்டமும் தீவிரம் அடைந்துள்ளதே ஒழிய பிரச்சினையின் தீர்வு நோக்கி இராணுவம் முன்னேறியதாக இல்லை 1990 ஆம் ஆண்டு யூனில் மீண்டும் போர் ஆரம்பித்ததில் இருந்து கிழக்குமாகாணம் தனது பூரணகட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக இராணுவம் அறிவித்த வேளையிலும் கிழக்கில் தொடர்ந்தும் போர் இடம்பெற்றவண்ணமேஉள்ளது.

அத்தோடு, கிழக்கில் அன்றிலிருந்து சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கு இராணுவம் எடுத்த முயற்சிகளும் வெற்றி அளிக்கவில்லை. இராணுவத்தரப்பில் ஆள்மாறி ஆள்மாறி அதிகாரிகள் வந்து போயினும், நிலைமையை இராணுவத்தால் வெற்றி கொள்ள முடியவில்லை

மாறாக நிலைமை மேலும் சிக்கலடைந்துள்ளது. புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட இனப்படுகொலைகள் சர்வதேசரீதியில் கண்டனத்திற்கு உள்ளாகின. இராணுவ நடவடிக்கை அதிகரிக்க அதிகரிக்கப் போராட்டமும் தீவிரப்பட்டதோடு. இனப்பிரச்சினைக்கு தனிநாடு ஒன்றைத்தவிர வேறு தீர்வு எதுவும் சாத்தியப்படப் போவதில்லை என்ற நிலையும் உருவானது.

இந்நிலையில், இனிமேல் இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமானால், சோமவன்ச அமரசிங்கா குறிப்பிட்டது போன்று வடக்கு கிழக்கில் இருந்து முதலில் இராணுவம் வெளியேற வேண்டும். அப்பொழுதுதான் அரசியல் தீர்வு குறித்து யதார்த்த பூர்வமாகச் சிந்திக்கவு, செயற்படவும்

# தமிழ்த் தேசிய வாதம் புதுடில்லியின் நீண்டகால அச்சம்!

இலங்கையில் தமிழர்களுக்கென ஒரு தனிநாடு அமைந்தால் அதன் தாக்கத்தால் தமிழ் நாட்டில் பிரிவினைக் கோஷம் வலுவடையும் என்றும், எனவே இலங்கையில் தமிழர் பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வு ஒன்றைக் கொண்டு வருவதற்கே ராஜீவ் காந்தி ஆர்வம் கொண்டிருந்தார் என்றும், முன்னாள் பிரித்தானிய இராணுவ செய்திச் சேவையின் அதிபர் எட்கார் - ஓ - பலன்ஸ் தனது 'சயனைட் போர்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

1984 மார்ச் மாதத்தில் வெளிநாடுகளில் வாழும் சில தமிழர்கள் புதுடில்லியில் அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியைச் சந்தித்து வெளிநாட்டில் ஒரு அரசை இலங்கைத் தமிழருக்கென அமைப்பதற்கு அவரது ஆதரவைக் கோரியிருந்தனர். அந்த வேண்டுகோளை திருமதி இந்திரா காந்தி நிராகரித்திருந்த போதிலும் அவர் இந்தப் பிரச்சினையில் தலையிட்டு இலங்கையை இந்திய மேற்பார்வையில் பிரித்திருப்பார் என எண்ண இடமுண்டு என்றும் குறிப்பிடப்படுகிறது.

ஆனால், இலங்கையினுள் தமிழ் இயக்கங்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வெற்றியடைந்தால் அது தமிழ் நாட்டில் பிரிவினைக் கோரிக்கை வலுவடைவதற்கு வழிவகுக்கும் என்பது இந்திய அதிகார வர்க்கத்தின் குரலாக இருந்தது. இக் குரலையே அப்போது இந்தியத் தூதுவராக கொழும்பில் கடமையாற்றிய ஜே என். டிட்சித் எதிரொலித்தார்.

### தமிழ் நாட்டில் பிரிவினை வாதம்!

இந்தியாவில் பாகிஸ்தான் என்றதனிநாடு வேண்டுமென்று ஜின்னா நினைப்பதற்கும், 'காலிஸ்தான்' என்றொருநாடு கோரி சீக்கியர்கள் கிளர்ச்சி செய்வதற்கும் நீண்டகாலத்திற்கு முன்னரேதென்னிந்தியாவில் தனிநாட்டுக்கான கோரிக்கையை சில அமைப்புக்கள் எழுப்பியிருந்தன. இந்த அமைப்புக்களின் செயற்பாடுகள் இந்திய சுதந்திர இயக்கத்தை நடத்தி வந்த காங்கிரசிற்கு தலையிடியாகவும் இருந்துள்ளன. அப்போது சென்னை இராசதானி என அழைக்கப்பட்ட பிரதேசம் தனிநாடாகப் பிரிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை 1916லேயே எழுப்பப்பட்டிருந்தது.

1935ம் ஆண்டில் தனிநாட்டுக்கான கோரிக்கை தமிழ் நாட்டில் பலமடைந்திருந்தது இதனைக் கண்டு பிரித்தாளும் பிரித்தானியரின் உதவியுடன் தமிழர்களுக்கென தமிழ்நாடு அமைந்து விடுமோ என்ற அச்சம் ஜவஹர்லால் நேருவின் இளமைப்பருவத்திலேயே அவரது மனதில் பதிந்திருந்துள்ளது.

இவம் நேருவுக்கு பிரிவினை வாதம் என்ற அச்சத்தை ஏற்படுத்திய தென்னிந்திய தனிநாடு கோரும் முன்னணியில் இருந்துதான் திராவிடர் கழகம் தோன்றியது. ஆனால் ஈ.வே ராமசாமிப் பெரியாரின் வளர்ந்த திராவிடர் கழகம் 1948 இலேயே பிளவு கண்டது. அண்ணாதுரை தலைமையிலான திராவிடர் முன்னேற்றக் கழகம் தோன்றியது. பெரியாரின் தீவிர நாத்திகக் கருத்துக்களை ஆதரித்த அதே வேளையில் தேர்தல்களில் போட்டியிடவும், மிதவாதப் போக்கைக் கடைப்பிடிக்கவும் அண்ணாதுரை தலைமையிலான திராவிட முன்னேற்றக்கழகம் முன் வந்தது எனினும் திராவிடர்களுக்கென ஒரு திராவிடநாடு என்பதைப் பலமாக முழங்கி வந்த அண்ணாதுரை இந்திய - சீனப்போர் ஏற்பட்ட பின்னணியிலும், பிரிவினை வாதத் தடைச் சட்டம் அமுலுக்கு வந்த சூழலிலும் அந்தக் கோரிக்கையை பகிரங்கமாகவே கைவிட்டார்.

இந்த நிலையிலேயே 1968 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டில் ஆட்சியைக் கைப்பற்றியது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரதான அரசியல் எதிரிகளின் ஒருவராக இருந்த காங்கிரஸ் கட்சி தலைவரான காமராஜர் விளங்கி வந்தார். காமராஜரின் உதவியுடன் இந்தியப் பிரதமர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட திருமதி இந்திரா காந்தி காமராஜரின்கட்டுப்பாட்டில் இருந்து விடுபடவும், தமிழ்நாட்டில் அவரது செல்வாக்கைக் கட்டுப்படுத்தவும், 1972 ஆம் ஆண்டு தி.மு.க வுடன் உடன்பாடு கண்டார், திருமதி இந்திராகாந்திக்கும் காமராஜருக்கும் இடையில் ஏற்பட்ட விரிசலும் திருமதி இந்திராகாந்திக்கும் கருணாநிதிக்கும் இடையிலான உடன்பாடும், - தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சியின் தொடர்ச்சியான வீழ்ச்சிக்கும் எம்.ஜி.இராமச்சந்திரன் தலைமையிலான அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் எழுச்சிக்கும் வித்திட்டது.

இதன் பலனாக திராவிட இயக்கத்தின் பிரதான அரசியல் இலக்கு எனக் கணிக்கப்பட்ட திராவிட நாடு கோரிக்கை வலுவிழந்துபோனது. திராவிட இயக்கங்களின் பதவிப்போட்டிகளில் மறந்து போன ஒரு விடயமாக இது ஆகிப்போய்விட்டது.

இந்த நிலையில் இந்தியாவின் நேரு-காந்தி குடும்பத்திற்கு தமிழ் தேசிய வாதம் பற்றிய அச்சம் கடந்த எழுபத்தைந்துவருடகால வரலாற்றைக்கொண்டது எனலாம். அதாவது இந்த அச்சம் இடையிடையே வரும் அரசியல் சம்பவங்களால் ஏற்பட்டதுஎன்று கொள்வது பொருத்தமுடையதாகாது.

### புலிகள் மீது ஆத்திரம் ஏன்?

புதிய தமிழ்த் தேசிய வாதத்தினை தமிழீழ விடுதலைப் புலிகளும் தலைவர் பிரபாகரனுமே பிரதிபலிக்கின்றனர். தமிழ்நாட்டில் எழுந்த பிரிவினவாதக் குரலை சலுகைகளை வழங்கியதன் மூலமும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியதன் மூலமும் அடக்கியது போல அடங்கிவிட முடியவில்லை என்பதுவே இந்திய ஆளும் வர்க்கத்தின் இப்போதைய ஆதங்கத்திற்கும் ஆத்திரத்திற்கும் காரணமாக இருக்கலாம்.

ராஜீவ் காந்தி தனது பாட்டனாரினதும், தாயாரினதும் வழியை அடியொற்றி தமிழ் தேசிய வாதத்தை இல்லாதொழிக்க எங்ஙணம் கட்டி ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தினார் இந்த ஒப்பந்தத்தை திணிப்பதற்கு இந்தியப் படையை அனுப்பியபோதும் இது கால வரையும் ஏமாற்றப்பட்டவர்களைப் போல விடுதலைப் புலிகள் சலுகைகளைக் கண்டு ஏமாறவோ இராணுவ பலத்தைக் கண்டு பயப்படவோ இல்லை என்பது புதுடில்லிக்கு மேலும் ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கும் எனலாம்.

தமிழ்நாட்டில் பிரிவினை வாதம் பேசிய தலைவர்களை அடக்கி ஜனநாயக நீரோட்டத்திறகு இழுத்து வந்து பதவிப்போட்டிகளில் சிக்கவைத்து விட்ட போதும் தமிழ்த் தேசிய வாதம் ஒதுக்கப்பட்டிருந்தாலும் அது முற்றிலுமாக அழிந்து போய்விடவில்லை தமிழ் தேசிய வாதத்தை அழித்துவிட கடந்த மூன்று தலை முறைகளாக எடுத்த முயற்சிகள் வெற்றி கண்டுவிடவில்லை என்பது புதுடில்லியின் மனவருத்தத்திற்கு மற்றுமொரு காரணம் எனலாம் தமிழ்த்தேசிய வாதம் வளர்ச்சி அடைவதைத் தடுக்கபரிசுகள், அச்சுறுத்தல்கள், அரவணைப்புகள், தண்டனைகள் என்பன மூலம் புதுடில்லி எடுத்த முயற்சிகள் இதுகாறும் தோல்வியையே கண்டுள்ளன.

எதிர்காலத்தில் தமிழ்த் தேசியவாதம்எந்த வடிவத்தை எடுக்கும் என்று இப்போதே ஆருடம் கூறமுடியாது. எனினும் அரசியலில் குழறுபடிகள் செய்வதனூடாக தமிழ்த் தேசியவாதம் வளர்ச்சி அடைவதைக் கட்டுப்படுத்த முடியாது என்பதையும், இராணுவ நடவடிக்கைகள் மூலமாக அழித்து விடலாம் என நினைப்பது துக்ககரமான விளைவுகளையே ஏற்படுத்தலாம் என்பதையும் அறுதியிட்டுக் கூற முடியும்.

இந்தப் பின்னணியில்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது இந்திய அரசு பிறப்பித்துள்ள தடை உத்தரவு என்பது தமிழக மக்களுக்குப் போடப்பட்டிருக்கும் விலங்கு என்ற அறிவிப்பு முற்றிலும் பொருத்தமாகிறது.

காவிரி நதிநீர்ப் பிரச்சினை முதல் கச்சதீவுப் பிரச்சினை ஈறாக தமிழக மக்களின்நலன்களை இந்திய மத்திய அரசு ஈடேற்றப்போவதில்லை என்பதும் இதற்காகத்தமிழகமக்கள் எழுப்பும் கண்டனக் குரலை நெரிக்க டில்லியில் ஆளும் வர்க்கத்தின் கரங்கள் விடுதலைப் புலிகள் மீதான தடையுத்தரவைக் காரணம் காட்டும் என்பதையும் எதிர்காலம் நிரூபிக்கும்.

அப்போது இலங்கைத் தமிழர்களின் குறிப்பாக புலிகள் முன்னெடுக்கும் போராட்டத்தை வெறும் உணர்ச்சி பூர்வமான அடிப்படையில் மட்டும் அணுகி அரசியல் பேரத்திற்கு பயன்படுத்தி வந்த திராவிட இயக்கங்களின் இன்றைய தலைமைப் பொறுப்புகளில் இருப்பவர்கள் வருத்தப்படுவதால் பயன் ஏதும் ஏற்படப் போவதில்லை.

- இனியவன்

காஷ்மீர் எல்லையில் ஆப்கான் கெரில்லாக்கள்

# கண்ட இடத்தில் சுடுவதற்கு புதுடில்லி உத்தரவு

காஷ்மீர் எல்லைப்புறத்தில் பாதுகாப்பு மீண்டும் பலப்படுத்தப்பட்டுள்ளது.தகராறுக்கிடமான எல்லைப்புறத்தில் பாகிஸ்தான் பக்கத்தில் ஆப் தங்களுடன் காணப்பட்டதையடுத்து ஊரடங்குச்சட்டம் அமுலில் உள்ள 3 மைல் நீளமான பகுதியில் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டுள்ளது இந்தியாவின் பக்கம் புகுந்து பிரிவினை வாதிகளுடன் சேர்வதற்கு தயாராக உள்ளர் என்றும் காஷ்மீர் கெரில்லாக்களும் ஆப்கான் முஜாஹிதீன்

# புரட்சித் தலைவியின் அன்புத் தம்பி?

கடந்த 28-3-92 அன்று தென்காசியில் சிறுசேமிப்புத்துறை பரிசளிப்பு விழா நடைபெற்றது. அதில் நிதியமைச்சர் நெடுஞ்செழியன் கலந்து கொண்டு பரிசு வழங்கினார். அரசு விழா என்பதால் அதிக விளம்பரம் இல்லை என்றாலும் அ.தி.மு.க சார்பில்

கூனிக்குறுகி நிற்க வேண்டிய அவசியம் இல்லை. நான் மற்றவர்களைப் போல பயந்து கொண்டு வாழாமல் நிம்மதியாக இருக்கிறேன்...'' என்று தன்பேச்சுக்கு இடையே குறிப்பிட்டார். பிறகு ஏதேதோ பேசி தன் கட்சிக்காரர்களையும் மூட் அவுட் செய்து விட்

வேண்டும். அப்பொழுதுதான் அரசியல் தீர்வு குறித்து யதார்த்த பூர்வமாகச் சிந்திக்கவு, செயற்படவும் முடியும்.

இதேவேளை, 'இன, மத, மொழி என்ற வேறுபாடு இன்றி யாவரும் இந்நாட்டு மக்கள், அனைத்து மக்களுக்கும் உரிமைகள் வழங்கப்படும் போது பிரச்சினைக்கு இடமில்லை' என்ற சோமவன்சவின் தீர்விற்கான யோசனை கேட்பதற்கும், சிந்திப்பதற்கும் ஏற்புடையதாகவும் உயர்வானதாகவும் தென்படினும் நடைமுறையில் சாத்தியப்பாடான தொன்றாக இல்லை.

ஏனெனில் சோமவன்ச அமரசிங்ஹ மட்டுமல்ல, இன்று ஆட்சியிலிருப்பவர்களும், சிங்களப் பேரினவாதிகளும் இதேபோன்றே கூறுகின்றார்கள். அதாவது சகலருக்கும் சமவுரிமை என்ற போர்வைக்குள் சிறுபான்மை சமூகத்தின் தனித்துவத்தையும், அவர்களின் தாயகத்தையும் அழித்துவிடப் பார்க்கின்றார்கள். அத்தோடு, இன்று இலங்கையில் உள்ள இனங்களுக்கு இடையில் சந்தேகமும், அவநம்பிக்கைகளும் பெரிதும் வளர்ச்சி கண்டுள்ளன. எந்த இனத்தவரும் மற்ற இனத்தவரை சந்தேகக்கண் கொண்டே நோக்குகின்றனர். இதற்கு கடந்த காலத்தில் சிங்கள பேரினவாத சக்திகள் சிறுபான்மை இனங்கள் மீது மேற்கொண்ட ஒடுக்குமுறையே காரணமாகும்.

இந்நிலையில், இனப்பிரச்சினை தீர்விற்கு ஒற்றையாட்சிக்குள் பொதுமைப்படுத்தப்பட்ட தீர்வுத்திட்டம் எதுவும் ஏற்புடையதாக இருக்கப் போவதில்லை. தமிழரின் தனித்துவம், பிரதேசம் என்பன பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். பேரினவாத சக்திகளிடம் இருந்து எவ்வேளையும் பாதுகாப்புடன் தமிழ்மக்கள் வாழ முடியும் என்ற உத்தரவாதம் அளிக்கக்கூடிய தீர்வுத்திட்டமே இனி இனப்பிரச்சினைக்கு தீர்வாக அமையக் கூடிய தொன்றாகும்.

---

கறுப்பர்கள் தண்டிக்கப்பட்டால்

## மீண்டும் இனக்கலவரம் பரவுமென எச்சரிக்கை

லொஸ்ஏஞ்சல்ஸில் மீண்டும் ஓர் இனக்கலவரம் ஏற்படக்கூடிய அச்சம் தோன்றியுள்ளது. வெள்ளைச்சாரதி ஒருவரைத் தாக்கியதாக குற்றம் சாட்டப்பட்ட நான்கு கறுப்பினத்தவர்களும் தண்டிக்கப்பட்டால் இக்கலகம் மீண்டும் வெடிக்கலாம் எனக் கூறப்படுகிறது.

இக்கலகம் தொடர்பாக லொஸ்ஏஞ்சல்ஸ் டைம்ஸ் பத்திரிகை மேற்கொண்ட ஆய்வின் படி முன்போல ஒரு கலகம் ஏற்படாது என்பதை 29 சதவீத மக்கள் நம்புவதாகவும் 8 சதவீதமானோர் பீதியடைந்த நிலையில் வெளியேறத் திட்டமிட்டுள்ளதாகவும் 5 சதவீதத்தினர் தாரில் வேறு சமூகத்தினர் வாழும் சமூகத்துடன் வசிப்பதற்கு ஆயத்தம் செய்வதாகவும் தெரிவித்துள்ளது.

---

கிடமான எல்லைப்புறத்தில் பாகிஸ்தான் பக்கத்தில் ஆப்கான் முஜாகிதீன் கெரில்லாக்கள் தென்பட்டதை தொடர்ந்து காஷ்மீரில் கண்ட இடத்தில் சுடும்படி இந்திய அதிகாரிகள் உத்தரவு பிறப்பித்துள்ளதாக பி.டி.ஐ செய்தி ஸ்தாபனம் கடந்த வியாழன் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனால் இது தொடர்பான உத்தரவுகள் எப்பொழுது பிறப்பிக்கப்பட்டது என்று அச்செய்தி கூறவில்லை.

எல்லைப்புறத்தில் ஆப்கான் கெரில்லாக்கள் அதிநவீன ஆயு

மான பகுதியில் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டுள்ளது

காஷ்மீர் தீவிரவாதிகள் இந்தியாவிற்குள் நுழைவதற்கு உதவும் பொருட்டு பாகிஸ்தான் துருப்புகளும் ஆப்கான் முஜாஹிதீன் கெரில்லாக்களும் காஷ்மீர் எல்லைப்புறத்தில் கவனம் செலுத்தி வருவதாக அதிகார பூர்வவட்டாரங்களை மேற்கோள்காட்டி பி.டி ஐ செய்திவெளியிட்டுள்ளது.

இதேவேளைபாகிஸ்தானின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள காஷ்மீர்பகுதியிலிருந்து சுமார் 3000 காஷ்மீர் தீவிரவாதிகள்

வதற்கு தயாராக உள்ளார் என்றும் காஷ்மீர் கெரில்லாக்களும் ஆப்கான் முஜாஹிதீன் கெரில்லாக்களுக்கும் இடையில் தொடர்பு இருப்பதாகவும் இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தானுடனான எல்லைப்பகுதியில் உள்ள பாதுகாப்பு படையினருக்கு எல்லையைத் தாண்டி வரும் எவரையும் சுட்டுத்தள்ளுமாறு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக எல்லைப்புற நகரான பூச்சியிலிருந்து கிடைத்த அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

---

விளம்பரம் இல்லை என்றாலும் அ.தி.மு.க சார்பில் நாவலரை வரவேற்று பலவிதமான போஸ்டர்கள்... அதில் ஒருவர் அதிக உணர்ச்சி வசப்பட்டு 'புரட்சித் தலைவியின் அன்புத் தம்பி நாவலர் அவர்களே வருக! வருக! என்று போஸ்டர் அடித்திருந்தார்

திருநெல்வேலி டவுனைச் சேர்ந்த ஒருவருக்கு பம்பர் பரிசாக மாருதி கார் வழங்கிப் பேசினார் நெடுஞ்செழியன். வருகிற வழியில் 'அன்புத்தம்பி' போஸ்டரை பார்த்து விட்டாரோ என்னவோ .. அமைச்சர் பயங்கர மூட் அவுட்!

''எனக்கு தன்னம்பிக்கை உண்டு நான் யார் தயவையும் நம்பி இல்லை. நான் யாரிடமும் பல்லை இளித்து கைகட்டி

பேசி தன் கட்சிக்காரர்களையும் மூட் அவுட் செய்து விட்டார் நாவலர்.

நிருபர்களிடம் பேசுகையில் கூட 'விலைவாசியைக்குறைப்போம்' என்று சொன்னீர்களே? என்ற ஒரு நிருபரின் கேள்விக்கு 'நான் உங்களிடம் வந்து சொன்னேனா?' என்று காட்டமாகப் பதிலளித்தார். 'இல்லை .. உங்கள் கட்சியில் சொல்லப்பட்டதே?' என்று கேட்டதற்கு. 'யார் சொன்னார்களோ அங்கே போய்க் கேளுங்கள்' என்று பதிலளித்தார்.

மொத்தத்தில் - நாவலரின் தென்காசிப் பயணம் அவர்களுக்கும் சரி, கட்சிக்காரர்களுக்கும் சரி... அத்தனை திருப்தியாக இல்லை.

நன்றி - ஜூனியர் விகடன்

---

## காங்கிரஸ் கட்சியின் காரியக்கமிட்டி உறுப்பினர் விபரம் அறிவிப்பு

காங்கிரஸ் கட்சியின் காரியக் கமிட்டி உறுப்பினர்களின் பெயர் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் மத்திய அமைச்சர்களான சரத்பவார், அர்ஜுன்சிங் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர். இக்காரியக் கமிட்டி உறுப்பினர்களின் பெயர்கள் நேற்று முன்தினம் கட்சியின் தலைவரும், பிரதமருமான பி.வி. நரசிம்மராவினால் டில்லியில் வெளியிடப்பட்டது.

திருப்பதி மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட காரியக் கமிட்டி உறுப்பினர்களில் பெண்கள், பிற்படுத்தப்பட்டோர், மலை ஜாதியினர் ஆகியோர் இடம் பெறாமையினால் பல உறுப்பினர்கள் தமது பதவிகளைத் துறந்தது நினைவிருக்கலாம்.

இப்போது அறிவிக்கப்பட்டிருக்கும் காரியக் கமிட்டியில் கேரள முதல்வர் கருணாகரன், பஞ்சாப் முதல்வர் பியாந்த் சிங், மராட்டிய மாநில அமைச்சர் கிருஸ்ணகுமார் சின்டே, கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவரும், முன்னாள் மத்திய இணை அமைச்சருமான ஜனார்த்தனன் பூஜாரி, முன்னாள் மத்திய அமைச்சர் நவகிஷோர் சர்மா, அருணாசலப் பிரதேச முதல்வரும், மலைஜாதிஇனத்தவருமான ஓம்நத் தேவா மத்திய அமைச்சர்களான சரத்பவார், அர்ஜுன்சிங் ஆகியோரும் நியமன உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் திருப்பதி மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட பல்ராம் ஜாக்கர், குலாம் நபி ஆசாத், ராஜேஷ்பைலட், விஜயபாஸ்கரரெட்டி, அகமட் பட்டேல், ஆர். கே. தவன், ஏ.கே. அந்தோனி, ஜிதேந்திர பிரசாத் ஆகியோரும் காரியக் கமிட்டியில் அங்கம் வகிக்கின்றனர். கட்சியின் பேச்சாளரான வி. என். காட்கில் விசேட அழைப்பாளராகவும், நவகிஷோர் சர்மா, ஜனார்த்தன் பூஜாரி, சிசில் குமார், சின்டே, அகமட் பட்டேல் ஆகியோர் பொதுச்செயலாளர்களாகவும், கட்சியின் பொருளாளராக சீதாராம் கேசரி மேலும் இருமாதங்கள் நீடிப்பார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மேலும் இருவர் காரியக் கமிட்டிக்கு நியமனம் பெறுவர் எனவும், மேலும் இருவர் தேர்ந்தெடுக்கப்படுவர் எனவும் டில்லியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## இடைத்தேர்தலில் பூலான்தேவி

(டில்லி)

கொலை, கொள்ளை போன்ற நடவடிக்கைகளுக்காக பொலிசாரால் கைது செய்யப்பட்டு தற்போது சிறையில் வைக்கப்பட்டிருப்பவரும், பிரபல கொள்ளைக் கூட்டமொன்றின் தலைவியென வர்ணிக்கப்படுபவருமான பூலான்தேவி அடுத்த மாதம் புதுடில்லியில் நடைபெறும் இடைத்தேர்தலொன்றில் வேட்பாளராக போட்டியிடுகின்றார். இதே தொகுதியில் இரண்டு முன்னணி சினிமா நட்சத்திரங்களும் போட்டியிடுவது குறிப்பிடத்தக்கது.

---

## சட்டமன்றஉறுப்பினர்களின் உரிமைவரையறைவேண்டும் - எல். கே. அத்வானி

(டில்லி)

சட்டமன்ற உறுப்பினர்களின் உரிமைகள் வரையறுக்கப்பட வேண்டும் என்று இந்திய பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவரும், பாரதீய ஜனதாக்கட்சியின் தலைவருமான எல். கே. அத்வானி தெரிவித்தார்.

கோவாவில் உள்ள பனஜியில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்களின் இரண்டாவது மாநாட்டை நேற்று முன்தினம் தொடக்கி வைத்துப் பேசிய அவர் மேலும் கூறுகையில், இத்தகைய உரிமை நெறி ஏற்கனவே வகுக்கப்பட்டிருப்பதால் சிலமாநிலங்களில் சட்டமன்றத்திற்கும் நீதித்துறைக்கும் சமீபத்தில் ஏற்பட்ட மோதல்களைத் தவிர்த்திருக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

---

## ஈராக் - குவைத் எல்லை ஈராக் நிராகரிப்பு

(பக்தாக்)

குவைத்துடனான எல்லை தொடர்பாக ஐ. நா. வின் வரையறையை ஏற்றுக் கொள்ள முடியாது என ஈராக் கூறியுள்ளது சென்றவாரம் ஐ.நா.கமிஷன் மீண்டும் வரையறுத்த எல்லை நியாயமற்றது என்றும் குவைத்திற்கு சாதகமானது என்றும் கூறியுள்ள ஈராக்கின் வெளியுறவு அமைச்சர், புதிய எல்லையை ஐ.நா. பாதுகாப்பு சபை அங்கீகரித்தால் இந்தப் பிராந்தியத்தில் மீண்டும் கொந்தளிப்பு ஏற்படுவது நிச்சயம் என்றும் எச்சரித்தார்.

ஐ. நா. வரையறுத்த புதிய எல்லையின் படி ஈராக்கின் கடற்படைத் தளமொன்றும் எண்ணெய்வயலொன்றும் குவைத்திற்கு சேரக்கூடும்

ஈழநாதம்

முன்னாள் சோவியத்தின்

# புதிய பொதுநல அமைப்பு சிதறுண்டு போகும் அபாயம்

முன்னாள் சோவியத்தின் சுதந்திர நாடுகளின் பொதுநல அமைப்பு சிதறுண்டு போகக் கூடிய நிலைமை தோன்றி வருகிறது. இந்த நாடுகளின் தலைவர்கள் கூடிப் பேசிய உச்சி மாநாட்டில் பெரும் பாலான விடயங்களில் இவை இணக்கம் காண தவறியுள்ளன.

பதின்மூன்று ஒப்பந்தங்கள் கைச்சாத்திடுவதற்காக கூட்டப்பட்ட இந்த உச்சி மாநாட்டில் சிலவற்றில் மாத்திரமே எல்லா நாடுகளும் கைச்சாத்திட்டுள்ளன.

பாதுகாப்பு, பரஸ்பர உதவிகள் சம்பந்தமான உடன்படிக்கையில் ஆறு நாடுகள்மட்டுமே கைச்சாத்திட்டுள்ளன.

பொதுநல அமைப்பில் பிரதான இடத்தை வகிக்கும் நாடுகளில் ரஷ்யா மாத்திரமே புதிய பாதுகாப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுதந்திர நாடுகளின் பொதுநல அமைப்பு கலைக்கப்பட்டு அதற்குப் பதிலாக இருதரப்பு அல்லது பல தரப்பு ஒப்பந்தங்களின் அடிப்படையில் இந்த நாடுகள் செயல்படக் கூடுமென அவதானிகள் கருதுகின்றனர்.

பாகிஸ்தானின்

## ராணுவச்செலவு அதிகரிப்பு இந். அச்சுறுத்தல் காரணம்

[இஸ்லாமாபாத்]

இந்தியாவின் போர் அச்சுறுத்தலால்தான் தனது இராணுவச் செலவை அதிகரிப்பதாகப் பாகிஸ்தான் கூறியிருக்கிறது.

1992 1993 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நாட்டில் 27 சத விகித வருமானத்தை இராணுவத்துக்குச் செலவிட பாகிஸ்தான் அரசு முடிவு செய்திருக்கிறது. அதாவது சுமார் 8,000 கோடி ரூபாவை பாகிஸ்தான் இராணுவத்துக்குச் செலவிடும்

இந்தியா பாகிஸ்தானைவிட இராணுவத்துக்கு அதிக பணம் செலவிடுவதும், உலகில் அதிகமான எண்ணிக்கை கொண்ட தரைப்படையை இந்தியா வைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கன.

## அமெரிக்காவின் தடையை சீனா பொருட்படுத்தாது

(பீகிங்)

இந்திய, ரஷ்ய விண்வெளித் தாபனங்களின் மீது அமெரிக்கா விதித்துள்ள தடையானது ரஷ்யா புதிய போட்டி நாடு ஆகுவதைத் தடுக்கும் நோக்கமுடையது என்று சீன செய்தித் தாபனமான சின்கோவா கூறியுள்ளது.

ரொக்கட் தொழில் நுட்பம் இந்தியாவிற்கு விற்கப்படுவதற்கு அமெரிக்கா எதிர்ப்பு காட்டுவது தேவையற்றது எனவும் அச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை ரஷ்யா, இந்தியா ஆகிய நாடுகளின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு அமெரிக்கா விதித்துள்ள இரண்டாண்டுகால தடை உத்தரவை சீனா பொருட்படுத்தாது என்று சீன வெளிநாட்டு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

## பாகிஸ்தான் தொடர்பாக இந்தி. விளிப்புடன் இருக்கும்

-சரத் பவார்

[டில்லி]

பாகிஸ்தான், தீவிரவாதத்தை தொடர்ந்தும் ஆதரித்து வருவதால் இந்தியா தொடர்ந்து விளிப்புடன் இருக்கவேண்டும் எனவும் பாதுகாப்பு துறையில் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும் எனவும் இந்திய பாதுகாப்பு அமைச்சர் சரத் பவார் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் தவிர எல்லா அயல் நாடுகளுடனும் இந்தியா உறவைச் சீராக்கிக் கொண்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கடும் புயல் ஐவர் பலி

(கல்கத்தா)

மேற்கு வங்காளத்தில் வீசிய கடும் புயலினால் ஐவர் உயிரிழந்ததுடன், பலர் காயமடைந்துள்ளனர்.

மேற்கு வங்காள மாநிலத்தின் பீர்பூம் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் வீசிய இப் புயலினால் சுமார் நூறு கிராமங்கள் பாதிப்படைந்துள்ளன

## ஐ.நா.வால் எனது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம்

-நஜிபுல்லா

(காபூல்)

ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைகளால் தனது

முன்னாள் அதிபர் டாக்டர் நஜிபுல்லா கூறியுள்ளார்.

## இன்றைய உதைபந்தாட்டப் போட்டி

யாழ்.மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினரால் நடாத்தப்படும் பதினொரு பேர் கொண்ட உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில், பிரிவு ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஆறு கழகங்களுக்கிடையிலான லீக் முறையிலான இரண்டாவது சுற்றுப் போட்டியில் இன்று அளவெட்டி விநாயகர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கரவெட்டி நவசக்தி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது இன்று பி பகல் 3.30 மணிக்கு யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இப் போட்டி நடைபெறவுள்ளது.

## மரணத்தில் சந்தேகம்; சடலம் தோண்டி எடுப்பு

(நுவரேலியா)

விபத்தினால் இறந்துபோனதாகக் கருதப்பட்ட இளம் பெண் ஒருவரின் மரணம் தொடர்பாகப் பெற்றோர் பொலிஸில் சந்தேகம் தெரிவித்து முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து மீண்டும் விசாரணைகள் தொடக்கி விடப்பட்டுள்ளன

இம் மரணம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது;

நுவரேலியா பொரலந்த பகுதியைச் சேர்ந்த நில்மினி என்ற (வயது 26) பெண் கடந்த 8-4-92 இல் மார்பில் கத்தி குத்தியதால் மரணமானார். மரத்துண்டு ஒன்றை வெட்டும்போது கத்தி தவறுதலாக மார்பில் பாய்ந்ததால் மரணம் சம்பவித்ததாகத் தீர்ப்பு வழங்கப்பட்டு சடலம் அடக்கம் செய்யப்பட்டது.

ஆனால் பெற்றோரின் சந்தேகத்தை அடுத்து அடக்கம் செய்யப்பட்ட சடலம் நீதிபதி உதவி வைத்திய அதிகாரி ஆகியோர் முன்னிலையில் கடந்த திங்கள் சடலம் தோண்டி எடுக்கப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டு சடலத்தின் சில பாகங்கள் கண்டி வைத்தியசாலைக்கு பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

இது தொடர்பாகப் பலர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## இரத்ததானம் செய்யசென்ற இளைஞனுக்கு எயிட்ஸ்

இரத்ததானம் செய்ய முன்வந்த 19 வயது இளைஞர் ஒருவர் எயிட்ஸ் நோய்க் காவி எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

இரத்ததானம் செய்வதற்குச் சில யுவதிகள் கியூவரிசையில் நின்று கொண்டிருக்கையில் அவர்களில் ஒருவருடன் நட்புக் கொள்ளும் பொருட்டு இந்த இளைஞரும் கியூவரிசையில் சேர்ந்து கொண்டார்.

இவ்வாறு கடந்த வாரம் ஒப்ரோய் ஹோட்டலில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்ட குடும்ப நலத் திட்ட சங்கத்தின் வைத்திய பணிப்பாளர் டாக்டர் சிரியாணி பஸநாயக்கா தெரிவித்தார்.

இரத்ததானம் செய்வதற்கு கியூவரிசையில் நின்று கொண்டிருந்த யுவதி ஒருத்தி உட்பட 40 யுவதிகளுடன் தான் உட

தாக அவர் தெரிவித்தார்.

உத்தியோக புள்ளிவிபரங்களின் படி இந் நோயினால் 59 பேர் பீடிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிகிறது ஆனால் இத் தொகை கூடுதலாக இருக்கலாம் எனத் தெரிகிறது எனவும் கூறினார்.

இரத்தமேற்றுதல் தொற்றுள்ள சிறிஞ்சுகள், உபகரணங்கள், மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்கள். சவர அலகுகள், அக்குபஞ்சர் ஊசிகள், பச்சை குத்தும் ஊசிகள் ஆகியவற்றின் மூலமும் இவ் எயிட்ஸ் நோய் பரவுகிறது.

எனவே தானம் செய்யப்படும் சகல இரத்தத்தையும் இரத்தவங்கிகள் பரிசோதித்து பார்க்க வேண்டும் என டாக்டர் பஸநாயக்கா தெரிவித்தார்.

கட்டையர்

ரஞ்சன், ஜே. ஒ. சி குண்டு வெடிப்பு

# வாக்குமூலம் அளிக்கவில்லை கையொப்பம் மட்டும் இட்டேன்

- மாணவன் சாட்சியம்

(கொழும்பு)

காலை முதல் இரவு வரை அடித்து அடித்து விசாரித்த பின்னர் 40 பக்கங்களில் கையொப்பம் வாங்கினர் என முன்னாள் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ண கொலை, கூட்டுப்படை தலைமை அலுவலக குண்டு வெடிப்பு தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டுள்ள ஆனந்தபுரம் கிளிநொச்சியைச்சேர்ந்த தில்லையம்பலம் தயாபரன் (வயது-18) என்னும் மாணவன் தனது சாட்சியத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கைதான வேளையில் மாணவனாக கொழும்பில் கம்பியூட்டர் படித்து வந்தேன். கைதாவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் தான் பலாங்கொடைக்குச் சென்றேன்.

கிளிநொச்சியில் எனது வீட்டுக்காரர் இந்தியா சென்றுவிட்டதால் நான் கொழும்பு வந்தேன் படித்துக் கொண்டே பாஸ்போட் கிடைத்தால் இந்தியா செல்ல இருந்தேன்.

கொழும்பில் எனக்கு நண்பர்கள் கிடையாது சித்தப்பா வீட்டில் அவர்களது குடும்பத்தினருடன் தங்கியிருந்தேன்

என்னை 08-07-91-ல் பலாங்கொடைப் பொலிஸார் கைது செய்தனர். பின்னர் மறுதினம் விடுதலை செய்து 10 ஆம்திகதி மீண்டும் கைதுசெய்தனர்.

குற்றப் புலனாய்வுத்துறையைச் சேர்ந்த அல்விஸ் என்பவர் பலாங்கொடையிலிருந்து கொழும்பு கொண்டுவந்தார். என்னுடன்தந்தையும்கொண்டு வரப்பட்டார்.

11-ம் திகதி என்னையும், தந்தையையும் இன்ஸ்பெக்டர் நிலாப்தீனும், விஜயரட்னாவும் தாக்கினர். காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை தாக்குதல்நடந்தது அதன்பின்னர் கண்களைக்கட்டி பொரளைப் பொலிஸாருக்கு அனுப்பினர். அங்கும் அடி விழுந்தது. 17-8-91 வரை காலைமுதல் இரவுவரை அடித்து அடித்து விசாரித்தார்கள்.

16-11-91 இல் ஆறாம்மாடிக்குகொண்டுபோகப்பட்டேன். வாக்குமூலம் வாங்கிய பின் விடுதலை செய்வோம் எனக் கூறி கையொப்பமிடச்சொன்னார்கள்.

2-3 மாதங்கள் கழித்தே பெற்றோரைப் பார்க்க அனுமதிக்கப்பட்டேன். முன்னர் தந்தை என்னைப்பார்க்கவந்தபோது அனுமதிக்கப்படவில்லை. அப்பொழுது எனது உடலில் காயமிருந்தது

காலை முதல் இரவு வரை தாக்கியபோது மயங்கி விழுந்தேன். இரவு முழுவதும் வலியெடுத்தது. மயங்கிய நிலையில் என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

இன்ஸ்பெக்டர் நிலப்தீன் உட்பட பலர் என்னை அடித்தார்கள் நான் வாக்கு மூலம் எதுவும் கொடுக்கவில்லை. தட்டச்சு செய்யப்பட்ட பத்திரங்களில் கையெழுத்துப் பெற்றார்கள் என்று தெரிவித்தார்.

இவருக்கு எதிராக 1-12-88க்கும் 30-6-91 க்கும் இடைப்பட்டகால கட்டத்தில் புலிகளிடம் ஆயுதப் பயிற்சி பெற்றது இரண்டு குண்டு வெடிப்புகள் தொடர்பாகவும் தகவல் தெரிந்திருந்தும் அவற்றை மறைத்தது என குற்றம் சுமத்தப் பட்டுள்ளது

## மன்னார் திரும்பிய மக்கள் தற்காலிக கூடாரங்களில்

(மன்னார்)

மன்னார்த் தீவுக்கு இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட அகதிகளில் பலரும் தற்காலிக கூடாரங்களிலேயே தங்க வைக்கப்பட்டிருப்பதாகவும், பேசாலை கிராமத்தின் உள்ள பல வீடுகளில் இராணுவத்தினர் முகாமிட்டிருப்பதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் பொது மக்களின் முறைப்பாடுகளையடுத்து இப் பகுதியிலுள்ள வீடுகளை அவற்றின் உரிமையாளர்களிடம் மட்டும் ஒப்படைக்க இராணுவம் முன்வந்திருப்பதாகவும் தெரியவருகிறது.

அரசசார்பற்ற பத்திரிகைகள்

## வெளிநாடுகளின் கைக்கூலிகளாம்

[கொழும்பு]

தென்னிலங்கையில் இருந்து

தாபனமான சி.ஐ.ஏ. ஆகியவற்றின் கைக் கூலிகளாக

மேற்கு வங்காள மாநிலத்தின் பீர்பூம் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் வீசிய இப் புயலினால் சுமார் நூறு கிராமங்கள் பாதிப்படைந்துள்ளதுடன், பல வீடுகள் இடிந்து வீழ்ந்துள்ளதாகவும், உயர் அழுத்த மின்சார கம்பங்கள் சரிந்து விழ்ந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

(காபூல்)

ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைகளால் தனது உயிருக்கு அபாயம் நேரிடலாம் என்றும் எந்தவொரு வன்மையான முடிவையும் எதிர் நோக்க தான் தயாராக இருப்பதாகவும் ஆப்கானிஸ்தானின்

# மரண அறிவித்தல்

## முருகப்பர் சபாபதிப்பிள்ளை சோமசுந்தரம்

(இளைப்பாறிய சிரேஷ்ட வரிமதிப்பாளர், உள்நாட்டு இறைவரித் திணைக்களம்)

காலஞ்சென்ற திரு அழகரத்தினம் (முன்னாள் பிரதம லிகிதர் கல்வித்திணைக்களம்) திருமதி அழகரத்தினம் ஆகியோரின் மருமகனும், திருமதி மங்களேஸ்வரி தவபாலச்சந்திரன் (பரிசோதனை உத்தியோகத்தர் விவசாயத் திணைக்களம்), செல்வி யோகாம்பாள் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், திரு. தவபாலச்சந்திரன் (சிரேஷ்ட வரி உத்தியோகத்தர் உள்நாட்டிறைவரித் திணைக்களம்) என்பவரின் அன்பு மாமனாரும், கெளசிதா, சஜீவனி, செந்தீபன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், திருமதி சபாபதிப்பிள்ளையின் அன்புத் தம்பியும், திரு. அருளானந்தராசா, திருமதி தங்கராசா, காலஞ்சென்ற அருந்தவராசா ஆகியோரின் அன்பு மாமனாரும், திரு தங்கராசா (I P T. வவுனியா) திருமதி அருளானந்தராசா ஆகியோரின் அன்பு மாமனாரும், திரு. கார்த்திகேசு (இளைப்பாறிய கணக்காளர்), திரு. கணேசநாதன் (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்), திரு. பாலசுப்பிரமணியம் (டென்மார்க்) திரு. சிவகுமாரன் ஆகியோரின் சகலனுமான திரு. முருகப்பர் சபாபதிப்பிள்ளை சோமசுந்தரம் 16-05-92 இல் காலமானார் இவரது ஈமக்கிரியைகள் 17 - 05 - 92 நேற்று இவரது தம்பசெட்டி இல்லத்தில் நடைபெற்றது. இறுதிக் கிரியைகளின் போது சமூகம் அளித்த உறவினர், நண்பர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

புலோலி மேற்கு,
தம்பசெட்டி,
பருத்தித்துறை.

தகவல்:
கா. தவபாலச்சந்திரன்
[2580]

## -நஜிபுல்லா

முன்னாள் அதிபர் டாக்டர் நஜிபுல்லா கூறியுள்ளார்.

ஆப்கானின் தற்போதைய இடைக்கால அரசின் தலைவர் சிப்பத்துல்லாமுஜ தீத்அளித்த பொது மன்னிப்பிற்குள் முன்னாள் அதிபர் நஜிபுல்லாவும் அடங்குவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளபோதிலும் பிரதமராகப் பொறுப்பேற்க இருக்கும் ரபானி, நஜிபுல்லா இஸ்லாமிய சட்டங்களின் கீழ் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று கூறியிருப்பது தெரிந்ததே.

இதேவேளை டாக்டர் நஜிபுல்லாவைப் பாதுகாக்கக் கூடிய சமாதானத்திட்டமொன்றைவரையவேண்டியது ஐ. நா. சபையின் பொறுப்பாகும் என்று காபூலில் நஜிபுல்லாவிடம் பேச்சு நடத்திய பின்னர் பாகிஸ்தான் ராஜதந்திரி ஒருவர் கூறியுள்ளார்.

## புலிகள்

அந்த உத்தரவை மீளப் பெறுவதுபோல இதுவும் செய்யப்படலாம் என [illegible]திலளித்தார்.

## இனவிகிதா

நாங்களாஎன்றும் அவர் கேள்வி எழுப்பியிருக்கிறார் தென் பகுதிகொலைகளின் சூத்திரதாரிகள் யார் என்பது நீண்ட காலத்தின்பின்னர் இம்பெழுதுதான் வெளியாகிறது. இதேபோல கிழக்கு மாகாண படுகொலைகளின் சூத்திரதாரிகள் யார் என்பது ஒருநாள் வெளியாகும் என்றும அவர் கூறியுள்ளார்.

மக்கள் அமைதியான சூழலில்வாழ்வதையேநாம்விரும்புகின்றோம். இதற்காகவே நாம் முயற்சி செய்கின்றோம் இவ்வாறான எமது முயற்சிக்கு எம் மீதான இக் கொலைக் குற்றச்சாட்டு பாதிப்பினை ஏற்படுத்துவதாக அமைகிறது என்றும் அப் பேட்டியில் கூறப்பட்டது.

இரத்ததானம் செய்வதற்கு கியூவரிசையில் நின்று கொண்டிருந்த யுவதி ஒருத்தி உட்பட 40 யுவதிகளுடன் தான் உடலுறவு கொண்டதை இவ் இளைஞன் ஒப்புக் கொண்ட

## இராணுவத்தின்

யவரவில்லை.

போராளிகள் தரப்பில் வீரவேங்கை கவிமாறன் (பிரியந்தன் - தங்கராசா, குணராசா வெள்ளாவெளி மட்டக்களப்பு) வீரச்சாவை தழுவிக்கொண்டார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## கைதான

விடுதலை செய்யப்பட்ட போதிலும் 10 க்கு மேற்பட்ட மாணவர்கள் இதுவரைவிடுவிக்கப்படவில்லை.

இது தொடர்பாக பொலிசாரைவிசாரித்தபோது தமக்கு எதுவும் தெரியாதென பதில் அளித்துள்ளனர்.

## பொருள்கள்

இராணுவத்தினர் அவர்களை நோக்கி துப்பாக்கி பிரயோகத்தையும் எறிகணைத் தாக்குதல்களையும் மேற் கொண்டனர்.

இவ் ஏறிகணைத் தாக்குதலுக்கு ஒரு வீடு முற்றாக எரிந்துள்ளது.

## அகதி

களும் இராணுவ முகாம்கள் செறிந்துள்ளதும் முஸ்லிம்கள் அதிகமாக உள்ள பிரதேசங்களும் ஆகும்.

40 ஆக இருந்த அகதிமுகாம்களின் எண்ணிக்கை கடந்த இருமாதங்களில் 35 ஆக குறைக்கப்பட்டுள்ளது. பல முகாம்களிலிருந்து விரட்டப்பட்ட தமிழ் மக்கள் வேறு அகதி முகாம்களில் தஞ்சம் புக வேண்டிய நிலையில் உள்ளனர்.

இதனால் அங்குள்ள மக்கள் பெரும் இன்னலுக்குஉள்ளாகி வருகின்றனர்.

டர் பஸநாயக்கா தெரிவித்தார்.

## கட்டையர்

தெரியவில்லை.

இதேவேளை அப்பகுதியில் உலங்கு வானூர்தி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது.

பின்னர் காலை எட்டுமணியளவில் மூன்று பொம்மர்கள் மூன்று குண்டுகளை இப் பகுதியில் வீசியன. அப்பொழுது ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை.

## திருமலையில்

வருகின்றனர்.

முதலில் அரச அதிகாரிகள் தமிழ்மக்கள் வாழும் கிராமங்களுக்குச் சென்று சிலதேவைகளுக்காக உறுதிகள் தேவையென வாங்குகிறார்கள். சிலர் கொடுக்க மறுத்தபோது இராணுவ வன்முறைகள் பிரயோகிக்கப்பட்டன. வாங்கிச் செல்லப்பட்ட உறுதிகள் தொடர்பான எவ்வித தகவல்களும் அவற்றின் உரிமையாளர்களுக்கு கிடைப்பதில்லை.

செயலகத்தில் சென்று விசாரிக்கும் பொழுது உரிய பதில்கள் அளிக்கப்படவில்லை.

இதற்கிடையில் நில உறுதிகள் பறிக்கப்பட்ட இடங்களில் சிறிலங்கா இராணுவத்தினர் தமது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். இராணுவத்தினரின்தொல்லைகளைத் தாங்காது பலர் கிராமங்களிலிருந்து வெளியேறியுள்ளனர்.

பத்தினிபுரம் 45 ஆம் கட்டை ஆகிய கிராமங்களில் உறுதி அபகரிப்பும் தமிழர்கள் துரத்தப்படுவதும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அவற்றை அடுத்துள்ள கிராமங்களில் இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. திருக்கோணமலையில் தற்போது 10 - க்கு மேற்பட்ட தமிழ்க் குடியிருப்புகளுக்கு சிங்களப் பெயர்கள் இடப்பட்டுள்ளன.

## கைக்கூலிகளாம்

[கொழும்பு]

தென்னிலங்கையில் இருந்து வெளிவரும் அரசசார்பற்றசிங்கள தினசரிகள் வெளிநாட்டு உளவு ஸ்தாபனங்களின் கைக்கூலிகள் என அரசசார்புடைய பத்திரிகைகள் கண்டனம் தெரிவித்திருக்கின்றன.

''லக்தீப'', சுலங்க, ''ராவைய'' ஆகிய பத்திரிகைகள் வெளிநாட்டு உளவு நிறுவனங்களான இஸ்ரேலிய உளவுஸ்தாபனமான மொஸாட் இந்தியஉளவுஸ்தாபனமோ, அமெரிக்கஉளவுஸ்தாபனமான சி.ஐ.ஏ. ஆகியவற்றின் கைக் கூலிகளாக செயற்படுகின்றன என்றும் இதனாலேயே அரசுக்கெதிரானபிரசாரத்தில் இறங்கியிருப்பதாகவும் அரசுக்கு ஆதரவான பத்திரிகைகள் கண்டனம் செய்திருக்கின்றன.

## கோட்டை

மண்டைதீவுப் பகுதியில் இருந்து ஏவப்பட்ட ஆறு ஷெல்களும் அடுத்தடுத்து கோட்டையை அண்டிய பகுதியில் வீழ்ந்து வெடித்தன எனினும் எவரும் காயப்படவில்லை இதற்கிடையில் கோட்டை, கொட்டடி ஆகிய பகுதிகளை நோக்கி இராணுவத்தினர் பல தடவைகள் 50 கலிபர் வேட்டுக்களைத் தீர்த்த வண்ணம் இருந்தனர். இதனைத் தொடர்ந்து கோட்டை, குருநகர் கரையோரப் பகுதிக் குடிமனைகளில் வாழ்கின்ற மக்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடிப்போய்க்கொண்டிருந்தனர்.

(பா, 21)

## இந்து மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு பரிசளிப்பு

யாழ்ப்பாண இந்து மகளிர் கல்லூரியில் 1990 ஆம் ஆண்டு க. பொ. த (சா, த) பரீட்சையில் அதிசிறப்பாக சித்தியடைந்த மாணவிகளுக்கு அபிவிருத்திச் சங்கம் இன்று காலை 8.00 மணிக்கு பரிசளித்து கௌரவிக்க உள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி தி. நாகராசா அவர்களின் தலைமையில் நடைபெறும்இப் பரிசளிப்பு நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட திட்டப்பணிப்பாளர் திரு. எஸ் பத்மநாதன் அவர்கள் கலந்து கொண்டு பரிசில்களை வழங்குவார்.

சிறப்பு விருந்தினராக இக் கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கத்தலைவி செல்வி புஸ்பா செல்வநாயகம் அவர்கள் கலந்துகொள்ள உள்ளார்.

# நினைவூட்டுகிறோம்

மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பெறப்பட்ட நிரந்தர போக்கு வரத்து அனுமதி அட்டைகள்யாவும் இம்மாதம் 31 ஆம் திகதி வரையுமே செல்லுபடியாகும். மேலதிக விபரங்களுக்கு அருகில் உள்ள போக்கு வரத்து அனுமதி வழங்கும் காரியாலயத்தை நாடவும்.

[சி-4421]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1992ஆம் ஆண்டு மேமாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.